கோரிக்கை B.

வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு—தொடர்ச்சி.	(ரூபாய் ஆயிரத்தில்.)
52 பாசனம் குறித்த மூலதனச் செலவு	14,39,22
53 பொதுப் பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூதலனச் செலவு.	9,86,95
54 சாலைகள்-பாலங்கள் குறித்த மூலதனச் செலவு	8.27,91
55 சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்கு வரத்து குறித்த மூலதனச் செலவு.	12,38
56 காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு	6,57,47
57 ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு	17,66
58 பல்வகை மூலதனச் செலவு	5,05.08
மொத்தம்- B வருவாய்க் கணக்கில் வராத மூலதனச் செலவு.	50, 76, 59
C. கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும் கடனைத் திருப்பிச் செலுத்துதலும்.	
59 மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும்	1,00,47,13
பெருமொத்தம் ..	12,66,52,30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, பேரவை மீண்டும் 1990 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 19 ஆம் நாள் திங்கட்கிழமை காலை 9.00 மணிக்குக் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 12.45 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

1. தங்கத்தினால் செய்யப்பட்ட, சங்கிலியற்ற தாலியின் விற்பனைக்கு வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிகவரிகள் மற்றும் அறக்கட்டளைகள் துறையின் 25—9—1989 ஆம் நாளிட்ட 724 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.

2. தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைய விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளர் நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் 28—6—1989 ஆம் நாளிட்ட 379 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட

அறிவிக்கை. [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

3. தமிழ்நாடு வேளாண் விற்பனை அங்காடிகள் சார்நிலைப் பணிகள் மற்றும் தமிழ்நாடு வேளாண் விற்பனை அங்காடிகள் பணிகளுக்கான சிறப்பு விதிகள் மற்றும் அங்காடிக் குழுக்களின் சில பதவிகளுக்கான தற்காலிக விதிகளை வகுப்பது குறித்து வேளாண்மைத் துறையின் 5-7-1989 ஆம் நாளிட்ட 470 முதல் 476 ஆம் எண்கள் வரையிலான அரசாணைகளில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [தமிழ்நாடு 1987 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் விற்பனை அங்காடிகள் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1989) 52 (4) (சி) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

4. நரிக்குறவர்களுக்கு மலிவு விலையில் விநியோகிப்பதற்காக ஜிப்சி மையத்தினரால் வாங்கப்படும் பல்வேறு வகைப்பட்ட மணிகள் மற்றும் இழைகளுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிகவரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 16-9-1989 ஆம் நாளிட்ட 692 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

5. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிகவரிகள் மற்றும் அறக்கட்டளைகள் துறையின் 2-7-1988 ஆம் நாளிட்ட 821 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

6. நெல், பருத்தி, நிலக்கடலை, மிளகாய் மற்றும் அனைத்து வடிவிலான கரும்பு, வெல்லம் ஆகியவற்றிற்கான அங்காடிப் பகுதியாக உத்தமபாளையம் அங்காடியினை அறிவிப்பது குறித்து வேளாண்மைத் துறையின் 29-7-1989 ஆம் நாளிட்ட 554 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

7. அடையாறு புற்றுநோய் மையத்தினரால் 1988 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் முதல் 1989 ஆம் ஆண்டு மே திங்கள் வரை விற்பனை செய்யப்பட்ட பரிசுச் சீட்டுகளின் விற்பனைக்காக செலுத்தக்கூடிய வரியினை ரத்து செய்வது குறித்து வணிக

வரிகள் மற்றும் அறக்கட்டளைகள் துறையின் 16–10–1989 ஆம் நாளிட்ட 754 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

8. தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு சட்டமன்ற பயணப்படி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து பொதுத் துறையின் 28–7–1989 ஆம் நாளிட்ட 1260 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1951 ஆம் ஆண்டு சம்பளங்கள் வழங்கல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1951) 14 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

9. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு சட்டமன்ற (உறுப்பினர்களுக்கு சம்பளங்கள் வழங்கல் மற்றும் மருத்துவ செலவுகளை ஈடு செய்தல்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பொதுத் துறையின் 28–8–1989 ஆம் நாளிட்ட 1432 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1951 ஆம் ஆண்டு சம்பளங்கள் வழங்கல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1951) 14 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

10. தமிழ்நாடு 1977 ஆம் ஆண்டு அமைச்சர்கள் மற்றும் சட்டமன்றத் தலைவர்கள் (அரசு இல்லங்கள் அமைத்துக் கொடுத்தல் மற்றும் பராமரித்தல் மற்றும் அறைக்கலன்கள் அளித்தல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து பொதுத் துறையின் 28-8-1989 ஆம் நாளிட்ட 1433 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1951 ஆம் ஆண்டு சம்பளங்கள் வழங்கல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1951) 14 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

11. தமிழ்நாடு 1977 ஆம் ஆண்டு அமைச்சர்கள் மற்றும் சட்டமன்றத் தலைவர்கள் (தனியார் இல்லங்கள் அமைத்துக் கொடுத்தல் மற்றும் பராமரித்தல் அறைக்கலன்கள் அளித்தல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து பொதுத் துறையின் 28–8–1989 ஆம் நாளிட்ட 1434 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை[. தமிழ்நாடு 1951 ஆம் ஆண்டு சம்பளங்கள் வழங்கல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1951) 14 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

12. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு அமைச்சர்கள் மற்றும் சட்டமன்றத் தலைவர்கள் (குத்தகைக்கு எடுக்கப்பட்ட தனியார்

TRUTH ALONE TRIUMPHS

இல்லங்களை பராமரித்தல் மற்றும் அறைக்கலன்கள் அளித்தல்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பொதுத் துறையின் 28–8–1989 ஆம் நாளிட்ட 1435 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1951 ஆம் ஆண்டு சம்பளங்கள் வழங்கல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1951) 14 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

13. டி. என். ஓ. 9362 எண் கொண்ட பொருள் போக்கு வரத்து வாகனத்திற்கு செலுத்த வேண்டிய வரி பாக்கி மற்றும் தண்டத் தீர்வையினை ரத்து செய்வது குறித்து உள் (போ. 1) துறையின் 16–10–1989 ஆம் நாளிட்ட 2182 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

14. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு இந்தியாவில் தயாரிக்கப் படும் அயல்நாட்டு சாராவிகள் (மொத்த விலைக்கு வழங்குதல்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து மதுவிலக்கு—ஆயத் தீர்வைத் துறையின் 10–10–1988 ஆம் நாளிட்ட 1711 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

15, நபிகள் நாயகம் அவர்களின் பிறந்த தினத்தையொட்டி மதுக்கடைகள் ஒவ்வொரு வருடமும் மூடப்பட வேண்டும் என்பது குறித்து உள் (மதுவிலக்கு—ஆயத்தீர்வைத்) துறையின் 21–8–1989 ஆம் நாளிட்ட 944 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ்பேரவை முன் வைக்கப் பெற்றது.]

16. தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் செட்யூல்டு வகுப்பினர் மற்றும் ஆதிவாசிகளுக்காக கட்டப்படும் இல்லங்களுக்காக ஊராட்சி ஒன்றிய மரவேலைப்பாடு மற்றும் தச்சு மையங்களினால் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்படும் மரச் சாமான்களுக்கு வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 7–12–1989 ஆம் நாளிட்ட 864 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

17, கண்டசாரி சர்க்கரைக்காக வாங்கப்படும் கரும்புகளுக்கு கொள்முதல் வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 30-10-1989 ஆம்

நாளிட்ட 776 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

18. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 10-11-1989 ஆம் நாளிட்ட 814 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் ஏனைய தாள்கள்.

1. வீட்டுவசதி-நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 18-7-1981 ஆம் நாளிட்ட 581 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைக்கான பிழை திருத்தம்.

2. 1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி பகுதிகளுக்குள் இயக்கூர்திகளின் நுழைவின் மீதான வரி அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் 1/1990).

3. 1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்ட எண் 2/1990.)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS